தாய்மொழி பயன்பாடு படிப்படியாக அருகிச் செல்வது ஆபத்தான அறிகுறி!

எம் எண்ணங்களைப் பிறருக்கு வெளிப்படுத்த பயன்படும் ஒரு கருத்துப் பரிமாற்ற ஊடகமே மொழியாகும். ஒரு மொழி என்பது வெறுமனே ஒரு தொடர்பாடல் ஊடகமாக மட்டுமன்றி ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசும் இனங்களின் வரலாறு, வாழ்க்கைநெறி மற்றும் அவர்களின் பாரம்பரியத்தின் அடையாளமாகவும் திகழ்கிறது. அதனால்தான் தன்னை உலகுக்கு ஈன்று கொடுத்தவளுக்கு நிகராகப் பிறந்த நாட்டையும், சொந்த மொழியையும் மட்டும் 'தாய்' என விளித்துப் போற்றுகின்றோம்.

உலகில் பேசப்படும் எல்லா மொழிகளுக்கும் பேச வழக்கு, எழுத்து வழக்கு என்றும் இரு மொழி வழக்குப் பண்பு இல்லை. பேச்சு வழக்கை மட்டும் கொண்டுள்ள மொழி அம்மொழியைப் பேசும் குழுமத்தின் அங்கத்தவர்கள் அறிவுவளர்வதும் போது கூடவே அழிந்து விடுகிறது. பல ஆய்வாளர்களின் மொழியை இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். அதனால்தான் உலகில் பேசப்படும் அனைத்துத் தாய்மொழிகளும் பேணிக் காக்கப்பட வேண்டும் எனும் நோக்கினை வலியுறுத்தி மாதி மாதம் 21 ஆம் திகதி 'சர்வதேச தாய்மொழித் தினம்' ஆகக் கொண்டாட வேண்டும் என யுனெஸ்கோ 1999 ஆம் ஆண்டு அறிவித்தது.

ஆங்கில மொழிமூலக் கற்கை நடவடிக்கைகளே இடம்பெறுகின்றன. தமிழர்கள் மற்றும் இங்கு வாழும் ஏனைய இனத்தவர்கள் தம் தாய்மொழியை இரண்டாம் மொழியாகப் பாடமாகவும் தொழில்முட்பப் பல்கலைக்கழகத்தில் தமிழ்மொழியில் ஆசிரியர் பயிற்சி வழங்கப்படுவதையும் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

மலேசியாவிலும் சிங்கப்பூர் போன்றதொரு நிலையே காணப்படுகிறது. மலாயா பல்கலைக்கழகத்தில் 1949 இல் தமிழுக்காகத் தனித்துறை ஆரம்பிக்கப்பட்டதுடன், முதலாவது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினரும் உருவாக்கப்பட்டார். அத்துடன் இன்று வரை பல்வேறு தமிழ் இணையத்தளங்கள் மூலம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருகின்றனர்.

இவர்கள் வாழ்கின்ற சூழல் தமிழ் மொழி கற்பதற்கும், அதனைச் சரளமாகப் பயன்படுத்துவதற்கும் ஏற்ற சூழலாக அமையாவிட்டாலும், தம் பிள்ளைகளுக்கு தாம் வாழ்ந்த தேசத்தையும் அதன் பண்பாட்டுச் சூழலையும் அறிமுகப்படுத்த எத்தனிப்பதுடன் அப்பிள்ளைகளுக்கு முதலாம் மொழியாகவோ, இரண்டாம் மொழியாகவோ பாடசாலைகளில் கற்றறிந்திராத ஒரு மொழியை அண்மைக் காலங்களில் கனடா மற்றும் பிரிட்டனில் பாடசாலை மட்டத்தில் தமிழ் கற்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது கற்கிக்கின்றார்கள். இப்பிள்ளைகள் தமிழ் மொழியைத் தமிழ்ப் பாடசாலைகளுக்குச் சென்று கற்கிறார்கள்.

இவ்வாறு வெளிநாட்டில் பிறந்து வளர்ந்த பிள்ளைகள் அவர்கள் வாழும் பண்பாட்டுச் சூழலில் இயைபாக்கம் அடைந்துள்ளதால் இயல்பான உந்துதலுடன் தமிழைக் கற்பது கடினம். எவ்வாறிருப்பினும் இலங்கையிலுள்ள தம் உறவுகளுடனான தொடர்பாடல் தேவையை உணர்ந்தும், பெற்றோரின் தமிழ் நேசிய உணர்வை மதித்தும் சில பிள்ளைகள் தமிழை அர்வமாகக் கற்கிறார்கள். இவ்வாறு தமிழ் கற்கும் வாய்ப்புக்குக் தமிழ்ப் பாடசாலைகளில் கற்பிக்கப்படும் முறையும் ஒரு காரணம் எனலாம்.

புலம்பெயர் சமூகத்தில் வாழும் தமிழ் பிள்ளைகளின் பாட விதானங்களை நோக்கின் பெரும்பாலும் அவை இலங்கையில் மற்றும் தமிழகத்தில் முதல்மொழியாக கற்பிக்கும் நிமித்தம் வடிவமைக்கப்பட்ட பாடவி தானங்களை ஒத்துக் காணப்படுகின்றன. வெளிநாட்டில் வாழும் தமிழ்ப் பிள்ளைகளின் பாட விதானங்களை நோக்கின் பெரும்பாலும் அவை இலங்கையில் மற்றும் தமிழகத்தில் முதல்மொழியாக கற்பிக்கும் நிமித்தம் வடிவமைக்கப்பட்ட பாடவி தானங்களை ஒத்துக் காணப்படுகின்றன. வெளிநாட்டில் வாழும் தமிழ்ப் பிள்ளைகளின் பாட விதானங்களை நோக்கின் பெரும்பாலும் அவை இலங்கையில் மற்றும் தமிழகத்தில் முதல்மொழியாக கற்பிக்கும் நிமித்தம் வடிவமைக்கப்பட்ட பாடவி தானங்களை ஒத்துக் காணப்படுகின்றன.

புதிய கற்பித்தல் பொறிமுறைகளை உள்வாங்கி தமிழ் மொழியைக் கற்பிப்பதே இலகுவான வழி

ஒரு குழந்தை தன் வீட்டுச் சூழலில் பரிச்சயமான மொழியை முதல் மொழியாகக் கொண்ட கல்வியைத் தொடரின் அதனைத் தாய்மொழிக் கல்வி எனலாம். அல்லது குறிப்பிட்ட ஒரு மொழியை கல்வியாகக் கம் வேண்டியோ, அல்லது சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்ற காரணங்களை மனங்கொண்டு தொழில் நிமித்தமாகவோ, அல்லது குறிப்பிட்ட மொழியைப் பேசும் இனத்தவர்களுடன் சமத்துவமாகப் பழக வேண்டும் எனும் உயர் எண்ணம் கருதியோ, அல்லது கலவிப்பயிற்சியாலோ கற்றால் அது இரண்டாம் மொழியாகக் குறிப்பிட்ட ஒரு மொழியைக் கற்கும் செம்பாடு எனலாம். இவ்விரு முறைகளையும் அடிப்படையாகக்கொண்டு தமிழ் மொழியைக் கற்கும் போது ஏற்படும் சவால்கள் தொடர்பாகக் கருக்கமாக ஆய்வு செய்வத இக்கட்டுரையின் பிரதான நோக்கம் எனலாம்.

தமிழ் மொழியைப் பேசுவோர் உலகில் பல்வேறு நாடுகளில் வாழ்கின்றார்கள். தமிழ் கத்தும் இலங்கையிலும் பண்டைக் காலம் தொட்டு தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார் கள். 17, 17 ஆம் நூற்றாண்டுகளில் தென்னித் தியாவிலிருந்து தொழிலாளர்களாகச் சென்ற தமிழர்கள் தென் ஆபிரிக்காவிலும், மொரீஷி யஸ், ரீயூனி நீவுகளிலும் வாழ்ந்து வருகின் றார்கள். இலங்கையிலும் இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்கள் வாழ்ந்து வருகின் றார்கள்.

மேலும், மலேசியா, சிங்கப்பூர், பர்மா முதலிய நாடுகளிலும் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இதைவிட கனடா, அவுஸ் ரேலியா,அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இலட்சக்கணக்கான புலம்பெ யர்ந்த தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

தமிழ்மொழி தமிழ் நாட்டிலும், இலங்கை யிலும், சிங்கப்பூரிலும் அரசகரும மொழிக ளுள் ஒன்றாக இருக்கிறது. மலேசியாவில் இரண்டாம் மொழியாக உள்ளது. இந் நாடுகளைத் தவிர ஏனைய தெற்காசிய, தென்கிழக்காசிய நாடுகள், தென்னாபி ரிக்க நாடுகள், மொரீஷியஸ், ரீயூனி நீவு களில் கணிசமான தமிழர்கள் வாழ்ந்து வந்தாலும் பிறமொழிச் சூழல், பண் பாட்டின் செல்வாக்கினால் மொழியின் அடையாளத்தைப் படிப்படியாக இழந்து வருகின்றனர். இவர்கள் தம் சய அனுட் டானங்களின் நிமித்தம் கோயில்களில் பஞ்சபுராணம் ஓதும் போது தேவார திரு வாசகங்களை ஆங்கிலத்தில், பிரெஞ் சில் அல்லது தாம் வாழும் நாட்டின் மொழியில் ஒலிபெயர்ப்பு செய்து வெறுமனே ஒப்புவிப்பதைக் காண முடி கிறது.

அங்கு தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள் சில காணப்பட்டாலும், அம்மக்கள் மொழி இழப் புக்கு ஆளாகிவருவது வெளிப்படை என்பதை நிரூப்பனும், மொரீஷியஸ் நாட்டில் வாழும் தமிழர்கள் பிற பண்பாட்டுக்கு இயைபாக் கம் அடைந்தாலும் கூட அவர்களிடம் தம் சந்ததிக்கு இரண்டாம் மொழியாகவேனும் தமிழைக் கற்பிக்க வேண்டும் எனும் ஆர்வம் ஓரளவு இருக்கத்தான் செய்கிறது. மொரீஷி யஸில் உள்ள போட் லூயிஸ் எனும் இடத் தில் அமைந்துள்ள மகாத்மா காந்தி நிலை யத்தில் நிறுவப்பட்டுள்ள தமிழ்நூலையில் ஆர்வமுடித்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். மொரீஷியஸ் அரசாங் கம் தமிழ் மொழியைக் கொலவப்படுத்தும் வகையில் தம் நாட்டு நாணயத் தாளில் தமிழ் மொழிக்கும் இடங்கொடுத்துள்ளது.

தென் ஆபிரிக்கா, ரீயூனி, மொரீஷியஸ் நீவு களைப் போலல்லாது ஒப்பீட்டளவில் தமிழ் மொழிப் பயன்பாடு அதிகமுள்ள நாடுகளாக சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகள் விளங்குகின்றன. சிங்கப்பூர் அமைச்சர் பத வியிலிருந்து, பல உயர் பதவிகளிலும் தமிழர் கள் சாந்தக் கொண்டிருக்கின்றனர். இங்கு தீபாவளி, ஹைப்பொங்கல் கொண்டாட்டங் களின் போது முழு நாடுமே களைகட்டும். நகர அலங்காரங்கள் தமிழ்ப் பண்பாட்டை வெளிப்படுத்தும். இந்நாட்டில் தமிழ், மலே, ஆங்கில மொழி அரசகரும மொழிகளாக இருந்தாலும் அங்கு தமிழர் செறிந்து வாழும் மாகாணங்களில் வாழும் தமிழ்ப் பிள்ளைகளுக்கே கிட்டுகிறது; தமிழர்கள் குறைவாக வாழும் மாநிலங்களில் வாழும் பிள்ளைகள் இவ்வாய்ப்பினை இழக்கிறார்கள். வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் வெர் வேலைப்பளு காரணமாகப் பிள்ளைகளை தமிழ்ப் பாடசாலைக்கு அழைத்துச் செல்ல நேரமின்மை யால் தமிழைக் கற்பிக்காவிடினும் விடுகளில் தமிழில் பேசுகின்றனர்.

எவ்வாறிருப்பினும் பெற்றோருடன் அரை குறையாகவேனும் தமிழ் பேசும் பிள்ளை கள் தம் உடன்பிறப்புக்கள் மற்றும் சேர்த்து விளையாடும் சகபாடிகளுடன் தாம் பாடசாலையில் பயிலும் மொழியிலேயே பெரும் பாலும் பேசுகின்றனர். அவர்கள் வீட்டுமொழியாகத் தமிழைப் பேசத் தவறுவதற்குப் பல காரணங்கள் உண்டெனினும், அவர்க ளுக்குத் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்கு ஏற்ற வகையில் கற்றல் கற்பித்தல் பொறிமுறைகளைப் பயன் படுத்தப்படாமையின் அவர்களின் பெற்றோ ரின் தாய்மொழியானது அவர்களுக்குச் சிக்க லான, கற்பதற்குக் கடினமான மொழியாக அமைந்து விடுகிறது.

ஆகவே வெளிநாடுகளில் வாழும் தமிழ்ப் பிள்ளைகளின் மொழித்திறனை விருத்தி செய்ய வேண்டுமெனின் மொழியியல் நீதியாக வினைத்திறன் மிக்க அணுகுமுறை ஒன்றைக் கையாளும் தேவை உண்டு.

எமது நாட்டை எடுத்துக் கொண்டால் இங்கு 95வீதம் தமிழ்ப் பிள்ளைகள் தமது ஆரம்பக் கல்வியையும், சில துறைகளில் உயர்கல்வி வரையும் தமிழ் மொழியில் கற் கிறார்கள். தமிழகப் பிள்ளைகளுக்குக் கூடத் தமிழ்மொழியில் உயர்கல்வியைத் தொடரும் வாய்ப்பு இல்லை. அந்த வகையில் இலங்கை மாணாக்களால் 1950களின் பின்னர் தாய் மொழியில் பட்டப்படிப்புக்களை சமூக விஞ்ஞானத்துறைகளிலும் மானிடப் பண்பாட்டியல் துறைகளிலும் மேற் கொள்ள முடிந்தது. அதனால் தாய் மொழிமூலக் கல்வியானது ஆங்கிலக் கல்விப்சின்னணி இல்லாதகுடும்பப் பிள்ளைகளைச் சேர்ந்த பலகிராமத்து மாணாக் கரை உயர்நிலைக்கு இட்டுச் சென்று கல்விசார் நடவடிக்கைகளில் சாதிக்க வைத்தது.

இன்று இலங்கையில் தமிழ்மொழியை இரு பிரிவினர் கற்கின்றார்கள். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டோர் முதல் மொழியாக வும், சிங்கள மக்கள் தமிழை இரண்டாம் மொழியாகவும் கற்கிறார்கள். தமிழர்கள் சிங்களம் கற்கும் ஆர்வத்தை விடவும் சிங்களவர் தமிழ் கற்கும் ஆர்வம் அதிகமாகக் காணப்படுவதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அதேசமயம், தாய்மொழியானின் கற்றல் செயற்பாட்டில் இலக்கிய வழக்கே பிரதான இடம் வகிக்கிறது. இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்போருக்குப் பேச்சு வழக்கை அறிமுகப் படுத்தும் தேவை உண்டெனினும் எப்பிரதேச அல்லது எவ்வினக் கிளைமொழியைத் தராதர மொழியாகச் சிங்கள மாணாக்கருக்கு அறிமுகப்படுத்துவது என்பது தொடர்பாகத் தொடர்ந்தும் சிக்கல் நிலையே எழுந்த வண்ணம் உள்ளது. இப்பிரச்சினையினி ருந்து நழுவி விட இலக்கிய வழக்கில் மிகச் செயற்கைப்பாங்கான உரையாடல் களைப் பாடநூலில் அச்சிட்டு வெளியிடு கின்றார்கள்.

பாடத்திட்டம், பாடவிதானங்களைத் தயாரிக்கும் குழாம் உயர்வு அல்லது தாழ்வுச் சிக்கல்களைப் புறந்தள்ளி, இன வாதம் பிரதேச வாதங்களுக்கு இடம் கொடாது தூய்மையான எண்ணத்துடன் நிறைந்த மனிதாபு மொழியில் நீதியாக இப் பிரச்சினையை அணுகித் நீர்வு கண்டால் ஒழிய இரண்டாம் மொழியாகத் தமிழ் கற்கிக் கும் செம்பாட்டை எம்நாட்டில் வெற்றிக ரமாக முன்னெடுக்க முடியாது. இரண்டாம் மொழி மாணாக்களுக்குப் பேச்சுத் தமிழைக் கற்பிக்கும் போது எழுத்துத் தமிழுக்குச் சற்று நெருக்கமான இனமொழி ஒன்றைத் தெரிவு செய்வின் கற்றல் கற்பித்தல் செயற்பாடு ஓரள வேனும் சாதகமான பலனைத் தரும் என்பது எம் தனிப்பட்டகருத்து ஆகும்.

இரண்டாம் மொழியாக மட்டுமன்றித் தாய்மொழியாகக் கற்கும் மாணாக்கரின் பாடநிட்டங்களிலும் பல சிக்கல்கள்காணப் படுகின்றன. எது எப்படியாயிருப்பினும் ஒரு மொழியைத் தாய்மொழியாகவோ, இரண் டாம் மொழியாகவோ கற்பிக்க முன்னர் ஆசிரியர்கள் முறையாகப் பயிற்றப்பட்டி அவசியம். மேலும், பாடத்திட்டங்கள், பாட விதானங்களை நவீன மொழியில் நீதியாக நோக்கக் கூடிய அனுபவம் மிக்க மொழியி யலாளர்களை அறுமுகி அவர்களின் ஆலோச னைக்கு அமைய இவற்றை வடிவமைப்பது சாலச் சிறந்தது.

மொழிக்கல்வினை எடுத்துக் கொண்டால் மொழித் திட்டமிடல், மொழிக் கொள்கை, மொழிக் கற்றல் கற்பித்தல் செயற்பாடு தொடர்பாக எவரும் தாம் விரும்பிய படி கருத்தை முன்வைக்கலாம் எனும் நிலைவையே காண முடிகிறது. மொழித்து றையில் சம்பந்தமில்லாதவர்கள் கூட ஒரு மொழியை எவ்வாறு கற்பிக்க வேண்டும் என்ற மனம் போன போக்கில் பேரவைக ளில் கலந்துரையாடுவதை அவதானிக்க முடி கிறது. ஒரு மொழியை பேசுவது மட்டும் தான் கற்பித்தலுக்குக் தேவையான தகுதி என்றும், மொழியைக் கற்பிப்பது என்பது மிகவும் இலகுவான விடயம் என்றும் எண்ணும் மலினமான மனப்பாங்கே இதற் குக் காரணம் எனலாம்.

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் பல வற்றில் தமிழ்மொழி இலகுவான மொழித் டைவில் புதிய புதிய கற்பித்தல் பொறிமுற களைப் பயன்படுத்திக் கற்பிக்கப்படுகின்றது. அமெரிக்காவில் மட்டும் 7 பல்கலைக்கழ கங்களில் தமிழ்மொழி கற்பிக்கப்படுகின் றது. கலிபோர்னியா பல்கலைக்கழகம், சிக்காக்கோ பல்கலைக்கழகம், கோர்னல் பல்கலைக்கழகம், ஹவாய் பல்கலைக்கழ கம், பென்சில்வேனியா பல்கலைக்கழகம், டெக்லஸ் பல்கலைக்கழகம், வோஷிங்டன் பல்கலைக்கழகம் என்பவையே அவையா கும். வெளிநாட்டில் தமிழ்ப் பாடசாலை களை நடத்துபவர்கள் அங்குள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் போது பயன்படுத்தி தும் அணுகுமுறைகளைக் கூர்ந்து அவதா னிப்பது நன்று.

எமது நாட்டிலும் இலகுவான மொழித் டைவில் புதிய கற்பித்தல் பொறிமுறைகளை உள்வாங்கித் தமிழ் மொழியைக் கற்பிக்கமு போனால் தமிழ் பேசும் இனங்களின் எதிர் காலச் சந்ததியினரின் தமிழ்மொழித்திறனை ஒருபோதும் வீருத்தி செய்ய இயலாது.

கலாநிதி திருமதி
கவிதா இராஜரத்தினம்,
முதுநிலை விரிவுரையாளர்,
கணனி பல்கலைக்கழகம்,
அரசகரும மொழிகள் ஆலனைக்குழு உறுப்பினர்

சர்வதேச தாய்மொழித் தினம் இன்று

பலருக்கும் தெரியாத தமிழ் மொழியின் சிறப்புகள்!



புலம்பெயர் தமிழர்களின் எதிர்கால சந்ததியினரிடமிருந்து படிப்படியாக தூர விலகுகின்றது தமிழ்மொழி!